பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 19 | சனிக்கிழமை | 05.10.2024 | அதிர்வு 064

## கிரிக்கெட் விளையாடிய மாணவன் பரிதாபச் சாவு

**கொட்ட கலையில் சோகம்**



(விரிவான செய்தி 6 ஆம் பக்கத்தில்)



# மக்கள் தீர்ப்பை மதிக்கின்றேன்!

## ஜெய்சங்கரிடம் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி ரணில்

“இலங்கையில் இம்முறை மிகவும் அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியுள்ளோம். இந்தத் தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய தீர்ப்பை மதிக்கின்றேன். எனது ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் நாட்டுக்கும், மக்களுக்கும் என்னால் இயன்ற பணிகளை ஆற்றியுள்ளேன். அந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியா வழங்கிய முழுமையான ஒத்துழைப்புகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

06

# ‘13’ அமுல்: இந்தியா விடாப்பிடி



மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த உதவும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

“இலங்கையின் ஐக்கியம், ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைப் பேணும் அதேவேளை, தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரினதும் சமத்துவம் – நீதி – கௌரவம் – சமாதானம் ஆகியவற்றுக்கான

06

# மோடியும் மிக விரைவில் இலங்கை வர வேண்டும்

**இந்திய விஜயத்துக்கான அழைப்பையேற்ற அநுர இப்படி பதில்**



(விரிவான செய்தி 2 ஆம் பக்கத்தில்)




பொதுத் தேர்தலுக்கும் மத்தியில் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் தமிழரசுக் கட்சிக்கு இன்று மிக முக்கியமான நாள்.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் தேர்வு குழுவின் கூட்டம் இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

11 பேர் கொண்ட இந்த தேர்வு குழுவில் சுமந்திரன் தரப்பின் கை ஓங்கி இருப்பதாகக் கருதப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் முடிவுக்கு மாறாக தமிழ்ப் பொது வேட்பாளரைப் பகிரங்கமாக ஆதரித்த சிவஞானம் ஸ்ரீதரன், ஞானமுத்து ஸ்ரீநேசன் போன்றோருக்கு இத்தேர்தலில் இடம்

06





# மோடியும் மிக விரைவில் இலங்கை வர வேண்டும்

## இந்திய விஜயத்துக்கான அழைப்பையேற்ற அநுர இப்படி பதில்

வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக விரைவில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பதவிக்காலம் ஆரம்பிக்கும் தருவாயில் இந்நாட்டுக்கு வருகைத்தர கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அவர், ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வாழ்த்துச் செய்தியை ஜனாதிபதியிடம் கையளித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இந்திய – இலங்கை உறவுகளைப் பல்வேறு துறைகளுாடாக பலப்படுத்திக்கொள்வது குறித்தும் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்தார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை, முதலீடுகள், மின்சக்தி மற்றும் வலுசக்தி, பால் சார்ந்த உற்பத்தித் துறை என்பவை தொடர்பில் இந்தியா கொண்டிருக்கும் அக்கறையை வலியுறுத்திய அவர், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.


அதற்கமைய இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்காக இந்தியாவின் பாரிய சந்தை வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடியின் போது இந்திய வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தியாவுடனான தொடர்ப்புகளைத் தொடர்ந்தும் பேணுவதில் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை போன்ற இரு தரப்பும் அக்கறை காட்டும் விடயங்கள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார். – என்றுள்ளது.





# நிவாரணங்களை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி




இடைநிறுத்தப்பட்டுள்ள 2024 / 2025 பெரும் போகத்திற்கான உரம் வழங்குதல் மற்றும் மீனவர்க ளுக்கான நிவாரணத் திட்டங்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

செப்டம்பர் மாத நிலுவைத் தொகையுடன் ஒக்டோபர் மாதத்தில் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குவது தொடர்பில் ஆட்சேபனை இல்லை என ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பெரும்போகத்திற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் நீரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள் ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சு வெற்றியளிக்கவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



பொதுத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்து ரையாடல் வெற்றியளிக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஐக்கிய தேசியக் கட்சியுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் முன்னேற்றகரமானதாக அமையவில்லை. நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே ஒன்றிணைவதற்கு முடிவு செய்திருந்தோம்.

எனினும் ஐக்கிய தேசியக் கூட்டணியுடன் இணைவதற்கு எவ்வித இணக்கப்பாட்டையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி யில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை யும் முன்வைத்திருந்தோம்.

நாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் இருதரப்பின ருக்கும் இடையில் எவ்வித இணக்கப்பாடும் ஏற்படவில்லை.” – என்றார்.

# இலங்கை - இஸ்ரேல் விமானச் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது



இலங்கைக்கும், இஸ்ரேலுக்குமான விமானச் சேவை கள் நேற்று முதல் மீண்டும் வழமைக்குத் திரும்பியுள் ளன.

ஈரான் – இஸ்ரேல் மோதல் காரணமாக விமானச் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்று முதல் மீண்டும் இடம்பெறுகின்றன.

எவ்வாறாயினும், தற்போதைய நிலையில், மீண்டும் மோதல் அதிகரிக்குமாயின் விமானச் சேவைகள் இரத்துச் செய்யப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

# ராஜிதவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலிருந்து பிரதிவாதிகளை விடுவிப்பதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பான உத்தரவு எதிர்வரும் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் எனக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

2019 ஜனாதிபதித் தேர்தலின் போது ராஜித சேனாரத்ன மற்றும் இருவர் வெள்ளை வான்களில் ஆட்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பாதகமான முறையில் செயற்பட்டனர் என குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிசங்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க அரசுத் தரப்பு தவறியதால், பிரதிவாதிகளை விடுவிக்குமாறு பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்போது, பிரதிவாதியான ராஜித சேனாரத்னவுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால், பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பி இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமெனச் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

இரு தரப்பும் முன்வைத்த உண்மைகளைப் பரிசீலித்த நீதிபதி, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை விடுக்காமல் இருப்பதா, இல்லையா? என்பது குறித்து 24 ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக அறிவித்தார்.

2019 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி கொழும்பில் வெள்ளை வான்களிலிருந்து மக்கள் கடத்தப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டை நடாத்தி, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக் ஷவை பாரபட்சம் பார்க்கும் நோக்கில் பொய்யான சாட்சியங்களை உருவாக்கி, ஜனாதிபதி தேர்தல் முடிவுகளைப் பாதிக்கக் கூடிய ஊழல் செயலை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டு, பிரதிவாதிகளான முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

# கெஹெலியவின் சொத்துக்களுக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிப்பு



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதி திட்டங்கள் என்பவற்றை இடைநிறுத்தி விதிக்கப்பட்ட உத்தரவைக் கொழும்பு மேல் நீதிமன்றம் நீடித்து நேற்று உத்தரவிட்டது.

லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் நேற்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஏலவே, லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான 16 வங்கிக் கணக்குகளுக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடப்பட்டது.

அத்துடன், 97 மில்லியன் ரூபா பெறுமதியான 5 ஆயுள் காப்புறுதி திட்டங்களுக்கும் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், மீண்டும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நேற்று விடுத்த கோரிக்கைக்கு அமைய, மேற்படி தடையுத்தரவு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# பஸ் நடத்துனர்களின் விதிமீறல் தொலைபேசி இலக்கம் அறிமுகம்

பஸ்ஸில் பயணிகளிடம் கட்டணம் அறவிட்ட பின்னர் அதற்கான பயணச்சீட்டையும் மிகுதிப் பணத்தையும் வழங்காத நடத்துனர்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு, மேற்படி முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர், பஸ் பயண கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மிகுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் பேருந்து நடத்துனர்களுக்கும், பயணிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# பொலிஸ் பொதுமக்கள் நிவாரண பிரிவை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஆலோசனை



கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டிருந்த பொலிஸ் பொதுமக்கள் நிவாரணப் பிரிவை மீள ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி, அரச விடுமுறை தினத்தைத் தவிர ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை பொதுமக்கள் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 140 சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு - 2 என்ற முகவரியில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்தில் பொதுமக்கள் நிவாரணப் பிரிவு இயங்கவுள்ளது.

தங்களது முறைப்பாடுகளுக்கு அமைய பொலிஸ் நிலையங்கள் மற்றும் விசாரணைப் பிரிவுகளில் எதிர்பார்த்த தீர்வு கிடைக்காதவர்கள் பொலிஸ் பொதுமக்கள் நிவாரணப் பிரிவு ஊடாக பொலிஸ் மா அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளிடம் முறையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் எவ்விதத் திருத்தமும் இடம்பெறாது




ஒக்டோபர் மாதத்திற்கான லாப்ஸ் சமையல் எரிவாயு விலையில் எவ்விதத் திருத்தமும் இடம்பெறாது என அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நிரோஷன் ஜே. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன்படி 12.5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு 3,680 ரூபாவிற்கும், 5 கிலோ கிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு 1,477 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை. லாப்ஸ் சமையல் எரிவாயு விலை இறுதியான கடந்த ஜுன் மாதம் திருத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கிரிக்கெட் விளையாடிய மாணவன் பரிதாபச் சாவு

## கொட்டகலையில் சோகம்



(க.கிஷாந்தன்)

நுவரெலியா, கொட்டகலை கேம்பிரிட்ஜ் பாடசாலையில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த மாணவன் ஒருவர், பிடியெடுக்க முற்பட்டபோது வழுக்கி வீழ்ந்து பாடசாலை கட்டடத்தில் மோதியதில் தலைப் பகுதியில் காயம் ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

மேற்படி கல்லூரியில் தரம் 13 இல் கல்வி பயிலும் தலவாக்கலை, கிரேட்வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த சிவகுமார் நஷீஸ் (வயது – 18) என்ற மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவன் நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை இடைவேளை நேரத்தில் சக மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்துள்ளார். பிடி எடுப்பதற்காக ஓடிய அவர், கால் தடுக்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து அவரின் தலைப்பகுதி பாடசாலை கட்டமொன்றில் சுவரில் மோதியுள்ளது. இதனால் அவரின் தலைப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. அவர் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் திம்புள்ள – பத்தன பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அளிக்கக் கூடாது என்று வெளிப் படையாக கூறி வருகிறார் சுமந்திரன் எம்.பி.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக இன்று கூடும் மேற்படி தேர்வு குழுவின் கூட்டத்திலும் இதே நிலைப்பாட்டை தாம் உறுதியாக வெளிப்படுத்துவார் என சுமந்திரன் நேற்றிரவும் தனது தரப்பு பிரமுகர் ஒருவருக்கு உறுதிபட தெரிவித்தார் என அறிய வந்தது.

இந்தப் பின்புலத்தில் சிறிதரன், சிறிநேசன் போன்றோருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட இடம் மறுக்கப்பட்டால் அது தமிழரசு கட்சிக்கும் பெரும் களேபரத்தைத் தோற்றுவிக்கும் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான்.

இதற்கிடையில், யாழ்ப்பாணத்தில் அரசியல் செய்யும் ஊடகம் ஒன்று தனது நிலைப்பாட்டை சங்கூதும் பணிக்கு மாற்றத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் வேட்பாளர் நியமனம் தமக்கு சாத்தியமற்றது என்பதை ஓரளவு புரிந்து கொண்ட அந்த ஊடக முதலாளி இப்போதெல்லாம் அது குறித்து வெளிப்படையாக பேசுவதைத் தவிர்த்து வருகின்றார். தமிழரசு வேட்பாளர் நியமனம் தமக்கு சாத்தியமற்றது என்பது புரிந்ததும் ‘எட்டாப்பழம் புளிக்கும்’ என்பது போல தமிழரசு வேட்பாளர் நியமனத்தை திட்டி குறை கூறி வருகிறார்.

இப்போது அவர் வேட்பாளர் நியமனத்துக்காக சங்கு பக்கம் பாயத் தயாராகிவிட்டார் எனத் தெரிய வருகிறது.

இனி என்ன, அவரின் ஊடகம் சங்கூதி விடயத்தை முடித்துக் கொள்ள வேண்டியதுதான்...!

## ‘13’ அமுல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அபிலாஷைகளுக்கு இந்தியா ஆதரவளிக்கின்றது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த நோக்கத்தை அடைய மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவது உதவும்.” – என்றுள்ளது.

## மக்கள் தீர்ப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று வெள்ளிக்கிழமை இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு இந்தியாவுடனான வலுவான உறவைப் பேணும் என்று நம்புவதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, பிரதித் தூதுவர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.











# பாதுகாப்பு படை பிரதானிகள் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுடன் சந்திப்பு

புதிய ஜனாதிபதியாக நியமனம் பெற்றதன் பின்னர் நாட்டின் பாதுகாப்பு படைகளின் பிரதானிகள் சம்பிரதாயபூர்வமாக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் முப்படைத் தளபதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

அதன்படி பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் ஜனாதிபதியை சந்தித்து சினேகபூர்வமாக கலந்துரையாடினர்.

இதன்போது நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.





# வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளுக்கான விசேட தினம் அறிவிப்பு




எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, எதிர்வரும் 11 ஆம் திகதி வரை 22 தேர்தல் மாவட்டங்களுக்குமான வேட்பு மனுக்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஊடாக ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 27ஆம் திகதியை விசேட தினமாக அறிவித்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும் எனப் பிரதி அஞ்சல்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பிரதிநிதி ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பு

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடா நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்குள் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு இடையிலான ஒத்துழைப்பு வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது தீர்க்கமாக கலந்தாலோசிக்கப்பட்டது.

இலங்கையின் புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஆர்வம் தொடர்பிலும் வதிவிடப் பிரதிநிதி இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிற்கு தெளிவுபடுத்தினார்.

ஊழலுக்கு எதிரான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு பாராட்டுத் தெரிவித்த அசூசா குபோடா, அரச சேவையின் வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்காக விரைவில் டிஜிட்டல் மயமாக்கலை நோக்கி செல்ல வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இந்த மறுசீரமைப்புகளை சரியான முறையில் மேற்கொள்வதற்காக டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் அரச ஊழியர்கள் பயிற்றுவிக்கப்பட வேண்டியது அவசியமெனவும், இலங்கையில் டிஜிட்டல் மயமாக்கலுக்குப் பிரவேசிப்பதற்கு தேவையான திறன் மற்றும் அறிவு கொண்ட அரச அதிகாரிகளை உருவாக்குவதற்கான உதவிளை வழங்குவதற்கு ஐ.நா அபிவிருத்தி வேலைத்திட்டம் தயாராக இருப்பதாகவும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஜனாதிபதி செயலாளரிடம் உறுதியளித்தார்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இயலாத காரியம் இது....!

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க பதவியேற்ற பின்னர் இலங்கைக்கு வந்து அவரைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டு உயர்மட்ட இராஜதந்திரி இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தான்.

வழமையாக இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏதும் நிகழும் போதும் புதிதாக பதவி ஏற்கும் ஆட்சித் தலைவர், தமது முதல் நேரடி ராஜதந்திர தொடர்பாடலை வைப்பது இந்தியாவுடன்தான்.

இலங்கைக்கு அருகில் ஓர் உபகண்டம் போல வல்லாதிக்க சக்தியாக இருக்கும் இந்தியாவை அனுசரித்து நடந்து கொள்வது புதிய ஆட்சியாளர்களுக்கு எப்போதும் பொருத்தமானதாக கருதப்பட்டமையால் இந்த ஒழுங்கு முறை எழுதாத ஒரு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அவரது முதல் பயணம் புது டெல்லிக்குத்தான்.

இப்போதும் கூட புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியாவைப் புறக்கணித்து நடக்க முடியாத ராஜதந்திர இக்கட்டில்தான் இருக்கிறார்.

அவர் பதவிக்கு வந்த கையோடு நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டமையால், நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சியை வலிமையாக வெற்றி பெற வைப்பது அவரது உடனடியான கட்டாயக் கடப்பாடாக இருக்கிறது. அதனால் வெளிநாட்டு பயணங்களை தவிர்த்து தமது உள்நாட்டு அரசியல் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய நெருக்கடியில் அவர் இருக்கிறார். பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அவர் உள்நாட்டில் தங்கியிருப்பது அவருக்குக் கட்டாயமாக உள்ளது.

இதன் காரணமாக பதவியேற்றதும் இந்தியா செல்லும் வழமையான மரபை அவர் பின்பற்ற முடியாத நிலையில் இருக்கிறார் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும், அவரது தேசிய மக்கள் சக்தியும் இடதுசாரி சிந்தனைப்போக்குடன் சீனாவோடு நெருங்கி பழகும் தரப்பு என்று கருதப்பட்டாலும், இலங்கை ஜனாதிபதி என்ற கதிரையில் அமர்ந்து கொண்டு இந்தியாவைப் புறந்தள்ளி நடக்க முடியாது என்று அயலக அழுத்தத்தை அவர் புரிந்து கொண்டிருப்பார் என்பது ஊகிக்கத்தக்கதே.

இந்தப் பின்புலத்திலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை இந்தியாவிற்கு விஜயம் செய்யுமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இந்தியப் பிரதமர் சார்பில் இந்த அழைப்பை இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை ஜனாதிபதியிடம் நேரில் வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்க, நாட்டின்பொதுத் தேர்தல் வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெற்று முடிந்த பின்னர், புது டெல்லிக்கு வருகை தருவார் என இந்திய தரப்புக்கு பதில் அளித்திருக்கின்றார் என்று தெரிய வருகிறது.

ஆயினும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இந்திய எதிர்ப்பு கருத்தியல் நிலைப்பாட்டை வெளியிட்டு வந்த அநுரகுமார திஸநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தி இயக்கமும் இப்போது அதிகாரத்துக்கு வந்த பின்னர் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை வெளிப்படையாக பிரதிபலிப்பது இயலாத காரியம் என்றே கருதப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் இலங்கையின்புதியஜனாதிபதிஇந்தியஎதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்து அதை நடைமுறைப்படுத்துவது என்பது சாத்தியமற்றது எனத் தோன்றுகின்றது.

# பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அல்ல த.வெ.க. மாநாட்டை ஒட்டி விஜய் கடிதம்



“மக்கள் இயக்கமாக இருந்த நாம், மக்களோடு மக்களாக நின்று களமாடி, அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போகும் இயக்கமாக மாறிவிட்டோம். அரசியல் களப் பணிகள் வேறு. அதற்கான நடைமுறைகள் வேறு. ஆம், அரசியல் களத்தில் வேகமாக இருப்பது எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியம் விவேகமாக இருப்பது. மேலும், யதார்த்தமாக இருப்பதைவிட எச்சரிக்கையுடன் களமாடுவது இன்னும் அவசியம்..”

– இவ்வாறு த.வெ.க. தொண்டர்களுக்கு அக்கட்சியின் தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

நடிகர் விஜய் கட்சியான தமிழக வெற்றிக் கழக மாநாடு இம் மாதம் 27ஆம் திகதி விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் நடைபெறுகிறது. இம்மாநாட்டுக்கு கடந்த 25 ஆம் திகதி இரவு போலிஸ் 17 நிபந்தனைகளுடன் அனுமதி அளித்தது. இதையடுத்து நேற்று அதிகாலையில் மாநாட்டுக்கான பந்தல் கால் நடும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிலையில், மாநாடு தொடர்பாக விஜய் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

“உங்களை நானும், என்னை நீங்களும் நினைக்காத நாளில்லை. அவ்வளவு ஏன்? நினைக்காத நிமிடம்கூட இல்லை. ஏனெனில், இந்த உறவானது தூய்மையான குடும்ப உறவு. அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்த கடிதம். அதுவும் முதல் கடிதம்.

தமிழக மக்களுக்காக நாம் உழைக்க வேண்டும். இன்னமும், முழுமை பெறாத அவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிரந்தரமாகப் பூர்த்தி செய்ய வேண்டும். அதை, அரசியல் ரீதியாக சட்டப்பூர்வமாக, உறுதியாக நிறைவேற்றிக் காட்ட வேண்டும். இதுதான், என் நெஞ்சில் நீண்ட காலமாக அணையாமல், கொழுந்துவிட்டு எரிந்துகொண்டே இருக்கும் ஒரு லட்சியக் கனல்.

இன்று, நமது முதல் மாநில மாநாட்டுக்கான கால்கோள் விழா இனிதே நடந்தேறி இருக்கிறது. இது மாநாட்டுத் திடல் பணிகளுக்கான தொடக்கம், ஆனால், நம் அரசியல் களப் பணிகளுக்கான கால்கோள் விழா என்பதும் இதில் உள்ளர்த்தமாக உறைந்து கிடக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். நம் மாநாடு எதற்காக என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே? நம் கழகத்தின் முதல் மாநில மாநாடு என்பது நம்முடைய அரசியல் கொள்கைப் பிரகடன மாநாடு. இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமெனில், இது நம்முடைய கொள்கைத் திருவிழா. அதுவும் வெற்றிக் கொள்கைத் திருவிழா. இப்படிச் சொல்லும்போதே, ஓர் எழுச்சி உணர்வு, நம் நெஞ்சில் தொற்றிக்கொள்கிறது. இது, தாய்மண்ணை நிஜமாக நேசிக்கும் அனைவருக்கும் இயல்பாக நிகழ்வதுதான்.

இந்த வேளையில், ஒன்றே ஒன்றை மட்டும் அழுத்தமாகச் சொல்ல வேண்டும் என விரும்புகிறேன். அதை நாம் எப்போதும் ஆழமாக மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். பொறுப்பான மனிதனைத்தான் குடும்பம் மதிக்கும். பொறுப்பான குடிமகனைத்தான் நாடு மதிக்கும். அதிலும் முன்னுதாரணமாகத் தி.க.மு.ம் மனிதனைத்தான் மக்கள் போற்றுவர். ஆகவே, நம் கழகத்தினர் இம்மூன்றாகவும் இருக்க வேண்டும் என்பதே என் பெருவிருப்பம்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடங்கி, மாநாட்டில் பங்கேற்பது வரை நம் கழகத்தினர் இராணுவக் கட்டுப்பாட்டுடன் இயங்குவர் என்பதை இந்த நாடும் நாட்டு மக்களும் உணர வேண்டும். நாம் உணர வைக்க வேண்டும். நம் கழகம், மற்ற அரசியல் கட்சிகள் போல் சாதாரண இயக்கமன்று. இது ஆற்றல் மிக்கப் பெரும்படை இளஞ்சிங்கப் படை, சிங்கப் பெண்கள் படை, குடும்பங்கள் இணைந்த கூட்டுப் பெரும்படை. ஆகவே, நம்மிடம் உற்சாகம் இருக்கலாம். கொண்டாட்டம் இருக்கலாம். குதூகலம் இருக்கலாம். ஆனால், படையணியினர் ஓரிடத்தில் கூடினால், அந்த இடம் கட்டுப்பாடு மிக்கதாக மட்டுமில்லாமல் பக்குவம் நிறைந்ததாகவும் இருக்கும் என்பதையும் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

இவர்களுக்கு அரசியல் என்றால் என்னவென்று தெரியுமா? மாநாடு என்றால் என்னவென்று தெரியுமா? களத்தில் தொடர்ச்சியாக நின்று வென்று காட்ட இயலுமா? இப்படி ஏகப்பட்ட கேள்விகளை நம் மீது வீசுவதில் அதீத விருப்பம் கொண்டவர்களாக சிலர் இருக்கின்றனர். இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் காட்டும்போதுதான் அவர்களுக்குப் புரியும். தமிழக வெற்றிக் கழகம் ஏதோ பேருக்கு அரசியலுக்கு வந்த கட்சி அன்று. வீறு கொண்டு எழுந்து அரசியல் களத்தில் வெற்றி காணப் போகின்ற கட்சி என்பதை நம்மை எடைபோடுவோரும் இனிமேல் புரிந்துகொள்வர்.

மக்கள் இயக்கமாக இருந்த நாம். மக்களோடு மக்களாக நின்று களமாடி, அரசியல் உரிமைகளை வென்றெடுக்கப் போகும் இயக்கமாக மாறிவிட்டோம். அரசியல் களப் பணிகள் வேறு. அதற்கான நடைமுறைகள் வேறு. ஆம், அரசியல் களத்தில் வேகமாக இருப்பது எவ்வளவு முக்கியமோ, அதை விட முக்கியம் விவேகமாக இருப்பது. மேலும், யதார்த்தமாக இருப்பதைவிட எச்சரிக்கையுடன் களமாடுவது இன்னும் அவசியம்.

இவை அனைத்தையும் உள்வாங்கி, உறுதியோடும் உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் மாநாட்டுப் பணிகளைத் தொடங்கித் தொடர்ந்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களின் பொறுப்பாளர்களும் அதுசார்ந்த சட்டமன்றத் தொகுதிப் பொறுப்பாளர்களும் விரைவில் அறிவிக்கப்பட இருக்கின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஒற்றுமையே நமது வலிமை என்பதை நாட்டுக்கு உணர்த்தும் வகையில் மாநாட்டுப் பணிகளைத் தொடர வாழ்த்துகிறேன்.

இந்நிலையில், மாநாட்டுக்கான நாள்களை மனம் எண்ணத் தொடங்கிவிட்டது. உங்களை வெகு அருகில் சந்திக்கப் போகும் சந்தோஷத் தருணங்களை இப்போதே மன அளவிடத் தொடங்கிவிட்டது. வி.சாலை எனும் வெற்றிச் சாலையில் விரைவில் சந்திப்போம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அதிகரித்த மின் கட்டணத்தினை செலுத்துவதற்கு புதிய விதிமுறை



மின்சார சபை அலுவலகத்தில் நேரடியாக மின் கட்டணம் செலுத்த பொதுமக்களுக்கு புதிய நிபந்தனை விதித்து, தமிழ்நாடு மின்சார சபை அறிவித்துள்ளது.

4000 ரூபாவுக்கும் அதிகமான மின் கட்டணத்தை மின்சார சபை அலுவலகத்தில் இனி நேரடியாக செலுத்த முடியாது என்றும் .4000 ரூபாவுக்கும் அதிகமான மின் கட்டணத்தை இனி இணையத்தின் மூலமாக மட்டுமே செலுத்த முடியும் என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், இனிவரும் மாதங்களி 3000 ரூபா, 2000 ரூபா என மின்சார சபை அலுவலகத்தில் செலுத்துவதற்கான அதிகபட்ச தொகை படிப்படியாக குறைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம்:

# பிரிட்டன் எண்ணெய் கப்பலை அதிரடியாக தாக்கிய ஹவுதிக்கள்




செங்கடலில் வந்த பிரிட்டன் எணணெய் கப்பல் மீது இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பலஸ்தீனத்தை தொடர்ந்து லெபனானிலும் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலை எதிர்த்து ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து லெபனானில் ஹிஸ்புல்லாவினரை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஏமனை சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களும் இஸ்ரேல் மற்றும் மேற்கு நாடுகளுக்கு எதிரான தாக்குதலை முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையில், செங்கடல் வழியாக வரும் கப்பல்களைத் தாக்குவோம் என்று ஹவுதிக்கள் தரப்பில் இருந்து கப்பல் நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது.

இதையடுத்து, செங்கடலில் வந்த பிரிட்டன் எண்ணெய் கப்பல் மீது இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய தாக்குதலை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர்.

கார்டெலியா மூன் எனப்படும் பிரிட்டிஷ் எண்ணெய் டேங்கர் கப்பல் மீது வெடிபொருள் நிரப்பப்பட்ட ட்ரோன் படகை மோத வைத்து ஹவுதிக்கள் வெடிக்கச் செய்துள்ளனர்.

ஏமனில் ஹவுதிக்கள் கட்டுப்பாட்டில் உள்ள துறைமுக நகரமான ஹுதைதாவில் இருந்து 110 கிலோமீட்டர் தூரத்தில் நடந்த இந்த தாக்குதல் நடந்துள்ளது.

மேலும், கார்டெலியா மூன் கப்பல் மீது எட்டு பாலிஸ்டிக் மிசைல்களை ஏவியும் மற்றும் டிரோன் மூலமாகவும் தாக்குதல் நடத்தினோம் என்று கூறியுள்ள ஹவுதிக்கள் கப்பல் தீப்பற்றி எரியும் காணொளியை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் ஹெலன் சூறாவளி: 200 இற்கும் மேற்பட்டவர்கள் பலி




அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதி மற்றும் புளோரிடா மாகாணத்தில் பாரிய அளவில் அழிவை ஏற்படுத்திய ஹெலன் சூறாவளியினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஐ கடந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த ஹெலன் சூறாவளியினால் மணிக்கு 225 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியுள்ளதுடன் பல்வேறு இடங்களில் கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், பல பகுதிகளில் வீடுகள் பல சூறாவளியால் சேதமடைந்துள்ளதுடன் ஜார்ஜியா மாகாணத்தில் பலர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புளோரிடாவின் தெற்கு மற்றும் வடக்கு கரோலினாவில் பலர் உயிரிழந்தமையினால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# விக்கிக்கு கம்பவாரிதி மடல்



**“சீச்சீ இவையும் சிலவோ”(?)**

**சி.வி. விக்னேஸ்வரன் அவர்கட்கு,**

**வணக்கம்.**

நூறு சதவீத கோபத்தோடும், வெறுப்போடும் தான் இக் கடிதத்தை நான் எழுதத் தொடங்குகிறேன். உங்கள் நலம் நோக்கிப் பிரார்த்திக்கக்கூட அஞ்ச வேண்டியிருக்கிறது. காரணம், தொடரும் உங்களது நடவடிக்கைகளின் தீமையேயாம். நீங்களே உங்கள் நலம் நோக்கிச் செயற்படாத போது, நான் மட்டும் உங்கள் நலம் நோக்கிப் பிரார்த்தித்து என்னாகப் போகிறது? “வாழ்ந்து போதீரே” என உரைத்துத் தொடருகிறேன்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

உங்களை ‘முன்னாள் நீதியரசர்’ என்றோ, ‘முன்னாள் முதலமைச்சர்’ என்றோ, ‘முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்’ என்றோ மரியாதை தந்து அழைக்கக்கூட என் மனம் ஒருப்படவில்லை. நாளுக்கு நாள் படியிறங்கிக் கொண்டிருக்கும் நீங்கள், முன்னர் வகித்த பதவிகளைப் பெருமை செய்ய விரும்பாத போது, நாங்கள் மட்டும் அவற்றைச் சொல்லி உங்களை மரியாதை செய்து என்னாகப் போகிறது?

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

முன்பு அகில இலங்கை இந்து மாமன்றம் உங்களுக்குச் “சத்திய வித்தகர்” என்ற பட்டத்தினை அளித்துக் கௌரவித்திருந்தது. இன்றைய உங்களது நடவடிக்கைகளைப் பார்த்தால் அந்தப் பட்டத்தினைச் “சத்தியம் விற்றவர்” என்று மாற்றுவதுதான் பொருத்தம் போல் தெரிகிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

சிலகாலம் நீங்கள் எங்களது கழகத்தில் பெருந்தலைவராகப் பதவி வகித்தீர்கள். உங்களது தோற்றம், உங்களது பதவி என்பவைதான் அப் பதவியைத் தூக்கி நாங்கள் உங்கள் கையில் தரக் காரணமாயின. அப்போதெல்லாம் நீங்கள் எங்கள் கழகத்தைக் காத்து வந்ததாகத்தான் நினைத்திருந்தோம். இப்போதுதான் நீங்கள் எங்கள் கழகத்தைக் காத்து வரவில்லை. நாங்கள் தான் உங்களைக் காத்து வந்திருக்கிறோம் எனும் உண்மை தெரிகிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

எங்கள் கம்பன்விழா மேடைகளில் புரட்சிகரமான சில செய்திகளைச் சொல்லிச் சொல்லித்தான் உங்களைத் தமிழ்ச் சமூகத்திற்கு நீங்கள் அறிமுகப்படுத்திக் கொண்டதாக இப்போதும் சிலர் சொல்லுகிறார்கள். அவை எல்லாம் அரசியலுக்குள் நுழைய நீங்கள் செய்த ஆரம்ப முயற்சிகள்தான் என்பது எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. நீதிபதி, நிமிர்வாகப் பேசுகிறார் என நினைந்து நாமும் மகிழ்ந்திருந்தோம்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

ஒருமுறை இறந்த போராளிகளுக்கு, எங்கள் கம்பன் விழாவில் அஞ்சலி செலுத்த வேண்டும் எனக் கேட்டு, திடீரென உங்களது பொய்யான சுதந்திரப் பற்றினைக் காட்ட முனைந்தீர்கள். அதுதான் நம் இனத்தின் அரசியலுக்குள் புகுவதற்கு நீங்கள் நேரடியாக அமைத்த புதுவழி என்பதும் அப்போது எமக்குத் தெரியாமல் போயிற்று.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

உங்கள் அரசியல் பிரவேசத்திற்கு எங்களை நீங்கள் பலிக்கடாவாக்க முயன்றது தெரியாமலே, நல்லகாலமாக சூழ்நிலை அறிந்து நான் உங்கள் கோரிக்கைக்கு உடன்பட மறுத்துவிட்டேன். அதைக் காரணம் காட்டி நீங்கள் எங்களை விட்டு விலகிச் சென்றீர்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

அத்தோடு நிற்காத நீங்கள், “கம்பன்விழாவில் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தக் கம்பன்கழகம் சம்மதிக்காததால் நான் அங்கிருந்து விலகி வந்து விட்டேன்” எனச் சொல்லி மிகச் சுலபமாகத் தியாகிப் பட்டம் தேட முயன்றீர்கள். உங்களது அந்தப் பொய்மையை விளங்காமல் சில முட்டாள்கள், இன்றும் கூட அதனை உண்மையெனப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

அதற்கு முன்பும் பலதரம், உங்களது பொய்மையை நான் இனங்கண்டிருந்தாலும், திடீரென வந்த உங்களது இனப்பற்று உண்மையாய் இருக்குமோ என்று நான்கூடச் சற்றுக் குழம்பித்தான் போனேன்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

அதனால்தான் வட மாகாண முதலமைச்சர் பதவிக்கான தேர்வு பற்றிச் சர்ச்சைகள் எழுந்த போது, நான் கூட அப்பதவிக்கு நீங்கள் வருவது பொருத்தம் என்பதாய் நினைந்து, உங்களுக்குச் சார்பாகப் பொது வெளிகளில் கருத்துத் தெரிவித்தேன்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

அங்ஙனம் நான் கருத்துத் தெரிவிப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது. வன்னிப்போர் நிகழ்வில் நடந்த அவலங்களால், உலகளவில் பிரபல்யமாகிப் பேசப்பட்டுக் கொண்டிருந்த நம் இனப் பிரச்சினையைப் பற்றி ஆராயவெனப் பல வெளிநாட்டுத் தூதுவர்கள் இங்கு வந்து கொண்டிருந்த நேரம் அது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

அங்ஙனம் வருவோருக்கு இங்கு நடந்தவற்றை எடுத்துரைக்க உங்களுக்கு அமைந்திருந்த சட்ட அறிவு, வகித்த உயர்பதவி, கண்ணியத் தோற்றம் என்பவை உதவும் என நான் நினைத்ததால்த்தான், உங்களுக்கான ஆதரவைத் தெரிவித்திருந்தேன். தமிழ்க் கூட்டமைப்புக்குள் தகுதியுள்ள, உண்மை இனப்பற்றுள்ள தக்கவர்கள் அதிகம் இல்லாதிருந்ததாலும் அப்படி நான் நினைக்க வேண்டியிருந்தது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

பின்னாளில்தான் உங்களது தகுதிகளாய் நான் நினைந்தவையெல்லாம் வெறும் மாயத் தோற்றங்கள்தான் எனத் தெரியவந்தது. அதனை, தொடர்ந்த உங்களது செயல்களால் நீங்களாகவேதான் தெரியப்படுத்தினீர்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

வெகு சீக்கிரத்தில் உங்களது பொய்மையை நான் இனம் கண்டு கொண்டேன். ஒரு பிழையானவரை நம் அரசியலுக்குள் கொணர்ந்து விட்டோம் என்பதை உணர்ந்து, முதன்முதலாக உங்களை விமர்சிக்கத் தொடங்கியவன் நான்தான்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

நான் உங்களைப் பொது வெளிகளில் விமர்சிக்கத் தொடங்கியபோது, உள்நாட்டில் இருந்து மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்தும்கூட பலர் என்னைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். உங்கள் மேல் நான் கொண்ட பகையால் தான் உங்களை நான் விமர்சிப்பதாக எழுதி என்னை அவர்கள் திட்டித் தீர்த்தார்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

ஏதோ ஒரு விழாவில், எனக்கு அடுத்தடுத்த இருக்கையிலிருந்த ‘மாவை’ ஐயா அவர்கள் உங்களை நான் விமர்சித்த காரணத்தால், என்னைக் கண்டும் காணாதது போல் முகந்திருப்பி என்னை அலட்சியம் செய்தார். என்ன செய்வது? முன் அறிவைக் குற்றமாய்க் கருதும் ஓர் இனத்தில் பிறந்துவிட்டதை நினைந்து இத்தகைய அலட்சியங்களைச் சகித்துக் கொண்டேன்.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

‘கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்குத் தான்’ எனும் அனுபவப் பழமொழி, மெல்ல மெல்ல உங்கள் விடயத்தில் வெளிப்படத் தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக உங்களது உண்மை முகம் தமிழ் மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

ஏமாறுவதற்கென்றே பிறந்த நம்மினத்தார் சிலர், அப்போதும்கூட உங்களை ஒர் உண்மை மனிதராகவும், தியாகியாகவும் நினைக்கத் தலைப்பட்டது தான் கொடுமையிலும் பெரிய கொடுமை. அத்தகைய ஏமாளிகள் தோள் கொடுத்துத் தூக்கியதால்தான் நீங்கள் பாரளுமன்றத்துக்குள்ளும் நுழைய முடிந்தது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

உங்களது வஞ்சனைக் குளறுபடிகள் பற்றி இதற்கு முன்பும் பல கட்டுரைகளில் நான் எழுதியிருக்கிறேன். செத்த பாம்பை எத்தனை தரந்தான் அடிப்பது? ஆனாலும் இன்றைய சூழ்நிலைத் தேவை கருதி அவற்றுள் ஓரிரண்டை இவ்விடத்திலும் சொல்லத் தோன்றுகிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + + +

பதவிக்கு வந்தநாள் தொடக்கம் உங்கள் செயல்களில் ஒரே மாறாட்டந்தான். அவை உங்களின் வயதால் வந்த

தொடர்ச்சி▼

# விக்கிக்கு கம்பவாரிதி மடல்

தொடர்ச்சி▲



மாறாட்டங்கள் அல்ல. வஞ்சனையால் வந்த மாறாட்டங்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

பதவிப் பிரமாணத்தில் நீங்கள் செய்த குளறுபடி, கட்சியை உடைக்க நீங்கள் செய்த குளறுபடி, தமிழ் மக்கள் பேரவை உருவாக்கத்தில் நீங்கள் செய்த குளறுபடி, சுன்னாகத் தண்ணீர் மாசுபட்டதில் நீங்கள் செய்த குளறுபடி, மாகாண அமைச்சர் பதவி வழங்குவதில் நீங்கள் செய்த குளறுபடி, மாகாண அமைச்சர்களைக் குற்றவாளியாக்கி நீங்கள் செய்த குளறுபடி, அரசாங்கத்திடம் வாகனம் வாங்க நீங்கள் செய்த குளறுபடி என நீங்கள் செய்த குளறுபடிகளின் பட்டியல் இன்றுவரை நீண்டு கொண்டே இருக்கிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

இன்னும் எத்தனையோ எழுதலாம். திரும்பத் திரும்ப இவற்றை எழுதி எனக்கே சலித்து விட்டது. யார் கண்டது? ஏமாறுவதற்கென்றே பிறந்த நம் ஈழத்தமிழர்கள் இன்னும் உங்களை நம்பி வேறு உயர்பதவிகளைத் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

எத்தனையோ போராளிகள் சிறைப்பட்டிருக்கவும், அது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், யாழ் வந்த இந்தியப் பிரதமரிடம் உங்களது ஐ.சு.ஊ. குருவான குற்றவாளி பிரேமானந்தாவின், சிறைப்பட்டிருந்த சீடர்கள் சிலரை விடுவிக்குமாறு கேட்டு நீங்கள் கடிதம் எழுதியதைக் கண்ட பிறகும் நம் இனம் உங்களை அடையாளங் கண்டுகொள்ளாமல் விட்டதை உங்கள் அதிர்ஷ்டம் என்பதா? நம்மினத்தின் துரதிர்ஷ்டம் என்பதா? எனத் தெரியவில்லை.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

அண்மையில் என்னைச் சந்தித்த தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர், பிரேமானந்தாவின் சிஷ்யர் இவர் எனத் தெரிந்த பிறகேனும் இவரை நாம் இனங்காணாதது பெரிய தவறுதான் எனச் சொல்லிக் கவலைப்பட்டார். காலங்கடந்த கவலை அது.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

கொலையாளி, கற்பழிப்புச் செய்தவர், ஏமாற்றுப் பேர்வழி என்றெல்லாம் குற்றஞ்சாட்டி இந்திய உச்ச நீதிமன்றம் ஆயுட்காலத் தண்டனை வழங்கிய ஒருவரை, ஓர் உயர் நீதிமன்ற நீதியரசராய் இருந்து கொண்டு இவர்தான் என் குருவெனத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்க உங்கள் ஒருவரால் தான் முடியும் என்று கருதுகிறேன்.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

“உன் நண்பன் யார் என்று சொல் நீ யார் என்று நான் சொல்கிறேன்” என்று சொல்வார்கள். “இன்று உன் குரு யார் என்று சொல் நீ யாரென்று நான் சொல்கிறேன்” என உங்களை வைத்து அத்தொடரை மாற்றிக் கொள்ளலாம் போல்த் தெரிகிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

உங்கள் குற்றங்களின் சிகரமாக, மீண்டும் உங்கள் குருவின் பெயர் சொல்லிமற்றொருஅசிங்கத்தைஅரங்கேற்றி இருக்கிறீர்கள். குருவின் மற்றொரு சீடர் குடும்பத்தின் பெண் மணியொருவருக்குச் சாராய “லைசென்ஸ்” வாங்கிக் கொடுத்து இன்று பழையபடி “பார்” போற்றும் பெரிய மனிதராய்ப் புகழ்(?) பெற்றிருக்கிறீர்கள்.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

அப் பெண்மணிபற்றி வரும் செய்திகள் மிகக் கேவலமானதாய் இருக்கின்றன. மூன்று சாராயக் கடைகளை அப்பெண்மணி குத்தகைக்கு எடுத்துவைத்திருப்பதாய் வரும் செய்தியோ, பல திருமணங்களைச் செய்ததாய் வரும் செய்தியோ தராத அதிர்ச்சியை, “ஓர் அபலைப் பெண்ணுக்கு வாழ்வளிக்க அவ்வுதவியைச் செய்தேன்” எனத் தாங்கள் விடுத்திருக்கும் அறிக்கை தந்திருக்கிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

அசிங்கத்தில் அசிங்கமாக கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் ஊடகங்களைக் கூட்டி கணவனை இழந்த ஓர் அபலைப் பெண்ணிற்கு உதவி செய்வதற்காகவே அந்த சாராயக் கடை ‘லைசென்ஸை’ வழங்குமாறு சிபாரிசு செய்தேன் எனக் கூச்சமில்லாமல் பேசியிருக்கிறீர்கள். “சீச்சீ! இவையும் சிலவோ” என நாம் கூசி நிற்க வேண்டியிருக்கிறது.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

இதற்குப் பின்பும் உங்களை எவரேனும் நம்பத் தயாரானால் அவர்களைப் பழைய ‘எதனாலோ’ தான் அடிக்க வேண்டும் என நினைக்கிறேன். இனியும் உங்களது செயல்களிற்கு எவரேனும் சமாதானம் செய்ய முன்வருவார்கள் ஆனால், அவர்களைப் போட நரகலோகத்தில் கூட இடம் இருக்காது என்பது நிச்சயம்.

+ + + + + + + + + + + + + + + + + + + + +

அதிகம் பேசி என்ன பயன்? நம்மினத்தின் கஷ்ட காலம், நீதித்துறைக்கு வந்த அவமானம் என்பதாய்ச் சொல்லி விடுவதைத் தவிர எம்மால் என்ன செய்ய முடியும்? இனியும் மக்கள் முன் வரத் துணிவீர்களானால் அந்தக் கேவலத்தைச் சொல்ல வார்த்தைகள் இருக்காது. எஞ்சிய வாழ்க்கையை யாவது நல்லபடி வாழ முயலுங்கள்.

**- கம்பவாரிதி**
**இ. ஜெயராஜ்**






# இன்றைய ராசி பலன்கள் -05.10.2024




இன்று உங்கள் விருப்பத்துக்கேற்ப முக்கிய முடிவுகளை உங்களால் எடுக்க இயலும். உங்கள் தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். நீங்கள் எதையோ சாதித்ததபோல உணர்வீர்கள்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும். உங்களுள் இருக்கும் திறமைகளை பணியிடத்தில் வெளிபடுத்துவீர்கள்.

உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இந்தப் போக்கின் காரணமாக உறவின் பிணைப்பு வலுப்படும். மனம் திறந்து பேசுவதன் மூலம் இருவரிடையே இருக்கும் இடைவெளி குறையும்.

இன்று நிதிநிலை உங்களுக்கு சாதகமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும்.

உங்கள் திடமான மனது மற்றும் உறுதி காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை விரைவாக ஆற்ற இயலாத நிலை காணப்படும். இன்று சோம்பலும் மந்தத் தன்மையும் காணப்படும்.

இன்று கொடுக்கப்பட்ட பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படுவதே இதற்கு காரணமாக இருக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படாது. புரிந்துணர்வின்மை காரணமாக தேவையற்ற கருத்து வேறுபாடு எழும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு கை கொடுக்காது. இதனால் கூடுதல் பணம்சம்பாதிக்கும் பல வாய்ப்புகளை இழப்பீர்கள். சிறிய அளவில் பண இழப்பும் காணப்படுகின்றது. எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

பருவநிலை மற்றும் ஒவ்வாமை காரணமாக தொண்டை சம்பந்தமான உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் மனதில் இருக்கும் குழப்பம் காரணமாக இன்று சிறிது அமைதியின்மை காணப்படும். இது உங்கள் முடிவெடுக்கும் திறமையை பாதிக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது கவனம் தேவை. இல்லாவிடில் தவறுகள் நேர வாய்புள்ளது. இது சிக்கலுக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்தணர்வு காணப்படும். இதனால் வாக்கு வாதங்கள் ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. திட்டமிடலின்மை காரணமாக நீங்கள்சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். இன்று சுறுசுறுப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்களால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. தோள் அல்லது கணுக்கால் வலி காணப்படும்.




இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடமிருந்து சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். காரணமேயில்லாமல் அவர்கள் உங்கள் மீது பழி போடுவார்கள். இது உங்கள் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற தவறான புரிந்துணர்வு கொள்வீர்கள். இதனை மாற்றிக் கொள்வது சிறந்தது.

இன்று பணபுழக்கம் குறைந்து காணப்படும் அதிர்ஷ்டமும் குறைந்து காணப்படும். எனவே உங்கள் செலவுகளை முறையாக திட்டமிட்டு செய்யவும்.

அதிக வெப்பம் காரணமாக தோலில் எரிச்சல் ஏற்படும். இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். நீங்கள் நல்ல மன நிலையில் காணப்படுவீர்கள். நல்லது நடக்கும் என்ற உணர்வுடன் இருப்பீர்கள்.

உங்கள் பணியில் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இந்தப் போக்கு உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு காணப்படும்.

இன்று உங்களுக்கு ஊக்கத்தொகை போன்ற வகையில் கூடுதல் பணம் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அமைதியின்மை காரணமாக உங்களிடம் உறுதியும் தைரியமும் குறைந்து காணப்படும். இது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் பணயில் சிக்கல்கள் காணப்படும் என்பதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். இது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்ல வாய்ப்பிருப்பதால் கவனம்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனால் இடைவெளி உண்டாகும். எனவே நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணாப்படும். பணம் இன்று குறைவாக இருபதால் நீங்கள் முறையாக திட்டமிட இயலாது.

இன்று பதட்டத்துடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். எனவே இன்று சகஜமாக இருக்க வேண்டும். அதன் மூலம் இன்றைய நாளை சிறப்பாக ஆக்கலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்களிடம் நிறைய எதிர் பார்ப்பார்கள். என்றாலும் சில கட்டுப்பாடுகள் காரணமாக நீங்கள் உங்கள் இலட்சியத்தை அடைய இயலாது.

உங்கள் துணை உங்கள் அன்பை சரியாக புரிந்து கொள்ள மாட்டார். நீங்கள் உங்கள் அன்பில் நேர்மையாக இருந்தாலும் அதனை உங்கள் துணை சரியாக புரிந்து கொள்ள மாட்டார்.

இன்று உங்களால் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. எனவே சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கடன் வாங்குவதற்கான சாத்தியம் உள்ளது.

ஒவ்வாமை காரணமாக கண்களில் எரிச்சல் ஏற்படலாம். தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்றைய நாள் கடினமாக இருக்கும். உங்களிடம் பதட்டம் காணப்படும். பிரார்தனை மற்றும் வழிபாடு சிறந்த பயனளிக்கும்.

பணிகள் அதிகமாகவும் நேரம் குறைவாகவும் காணப்படும். இதனால் உங்களுக்கு பதட்டம் உண்டாகும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தேவையற்ற சண்டைகள் ஏற்படும். கருத்து வேறுபாடு ஏற்படாமல் தடுக்க அவருடன் அனுசரித்து செல்வது சிறந்தது.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற உங்கள் லட்சியம் அவ்வளவு எளிதானதல்ல. பணம் வந்தாலும் தேவையற்ற செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை பராமரிக்க இயலாது.

பதற்றம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மற்றும் உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.

# இன்றைய ராசி பலன்கள் -05.10.2024




நீங்கள் இன்று விரைந்து பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் மேற்கொள்வீர்கள். உங்கள் இலக்குகளை அடைந்து திருப்தியடைவீர்கள்.

பணியிடச் சூழல் சுமூகமாக இருக்கும். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். இதன் மூலம் பணியில் சாதிப்பீர்கள்.

இன்று பக்குவமும் புரிந்துணர்வும் கொண்டதன் காரணமாக உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்களின் முயற்சி காரணமாக இன்று அதிக பணம் சம்பாதிப்பீர்கள். கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

பக்தியும் பிரார்த்தனையும் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். இதனால் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சில பிரச்சினைகளை சந்திக்க நேரும் என்பதால் பொறுமையும் மன உறுதியும் அவசியம். சிக்கலான சூழ்நிலையை சமாளிக்க நேர்மறையான எண்ணங்கள் அவசியம்.

உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளிடம் நல்லுறவு பராமரிக்க முடியாது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சிறிது குழப்பம் ஏற்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்ல மன நிலையும் புரிந்துணர்வும் காணப்படும்.

இன்றி நிதிநிலை சாதகமாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவுகள் காரணமாக நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

மனக் குழப்பம் காரணமாக ஆரோக்கியக் குறைபாடு காணப்படும். கால் வலி மற்றும் கணுக்கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




நீங்கள் எந்த செயலை செய்தாலும் அதனை பொறுப்புடன் செய்வீர்கள். இதனால் வளர்ச்சியும் வெற்றியும் எளிதாகப் பெறுவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

உங்கள் பணிகளை சாமர்த்தியமாக செய்வீர்கள்.தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொண்டு நல்லுறவை ஏற்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்றைய நாளை அதிக முயற்சி எடுக்க பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது.

இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சிக்கல் நிறைந்த நாளாக காணப்படும். வளர்ச்சி குறைந்து காணப்படும். இதனால் இன்று ஏமாற்றங்களும் நிறைந்து காணப்படும்.

உங்கள் சக பணியாளர்களிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உங்கள் வளர்ச்சி குறித்து அவர்கள் சிறிது பொறாமைப்படுவார்கள்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. நல்லுறவை பராமரிக்க சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். சேமிப்பு குறைந்து காணப்படும். இன்று நிதி குறித்த எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்.

உயரழுத்தம் மற்றும் பதட்டம் காரணமாக தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



